உளி 1 | ஓசை 29 | ஜூன் - 2019 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

முகப்பு ஓவியம் :
கமல் காளிதாஸ்

உள் ஓவியங்கள் :
கலைமாமணி அன்பழகன்
அழ.ரஜினிகாந்தன்

இணையதள முகவரி :
*www.padaippu.com*

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: *521/2018*
*#8,* மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
*607002*
*admin@padaippu.com*
*9469375575*

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| சரண்யாசத்தியநாராயணன் | 4 |
| வீ.கதிரவன் | 5 |
| அ.முத்துவிஜயன் | 5 |
| யாழு மகிழ் | 6 |
| வேதநாயக் | 7 |
| முகமது பாட்சா | 8 |
| கார்த்திகேயன் மாகா | 9 |
| சூர்யநிலா | 9 |
| சே.தண்டபாணி தென்றல் | 10 |
| காயத்ரி | 11 |
| ஜி.சிவக்குமார் | 11 |
| ஆண்டன் பெனி | 12 |
| ஜானு இந்து | 13 |
| பொள்ளாச்சி முருகானந்தம் | 14 |
| சௌவி | 15 |
| பெனடிக் அருள் | 16 |
| சந்துரு | 17 |
| ரிஸ்கா முக்தார் | 18 |
| ராம் பெரியசாமி | 19 |
| மதுரா | 20 |
| பழநிபாரதி | 21 |
| சத்யா தமிழச்சி மருதாணி | 21 |
| ஜி ராஜன் | 22 |
| கனிமொழி.ஜி | 23 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | 23 |
| குமரேசன் கிருஷ்ணன் | 24 |
| குறிஞ்சி நாடன் | 25 |
| கீர்த்தி கிருஷ் | 26 |
| ஐ.தர்மசிங் | 27 |
| சக்திஅருளானந்தம் | 28 |
| கோ.ஸ்ரீதரன் | 29 |
| முனைவர் வே. புகழேந்தி | 29 |
| தனபால் பவானி | 30 |
| பி.கே.சாமி | 31 |
| முனியாண்டி ராஜ் | 32 |
| மாறன்மணிமாறன் | 33 |
| ம.கனகராஜன் | 34 |
| வளவன் கரிகாலன் | 35 |
| ஷாலுமதி சுரேஷ் | 36 |
| ஏ. நஸ்புள்ளாஹ | 37 |
| தங்கேஸ் | 38 |
| இரா.கவியரசு | 39 |

## மொழும் பூவை

இரண்டு மாடியேறி வந்து
தரும் பூக்காரப் பாட்டி
என் மகளின் சிரிப்பிற்கு
சில்லரை வாங்காமல்
சிறு துண்டு பூவையும்
கத்திரித்து அவளின் கையில்
கொடுப்பதை வழக்கமாகிவிட்டாள்..
வேண்டாமென்று மறுத்தாலும்
பிடிவாதமாய் பேத்திக்குத்
தானேயென்று மகளின் கையில்
பூவை திணித்து செல்லும்
பூக்கார பாட்டிக்கு
இப்பொழுது நான் மானசீக
மகளாகின்றேன்...
என் கவலையெல்லாம்
கடனை தீர்க்கின்றேனென்று
சில்லரையை கொடுத்து
பூக்காரப் பாட்டியின்
மகனை போல்
நானும் அவளை தள்ளி
வைத்திடக்கூடாதென்பதே...



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

...சரண்யாசத்தியநாராயணன்



ஓவியம் : அன்பழகன்

உடைந்த மண் பானையில்
நிறைந்து கிடக்கிறது
காற்று

கூரை விட்டுக்குள்
வாசிக்க முடியா
சூரிய புல்லாங்குழல்

எண்ணை தெறித்து
வடை சுட்ட தழும்புகள்
நிலவு முழுதும்

ஏற முடியாமல்
சாய்ந்து கிடக்கிறது
ஏணியின் நிழல்

...**வீ.கதிரவன்**

அடரிருளுக்குள் நீட்டிக்கப்பட்ட
கருந்துளைக்குள்
அனாதையாக யாருமின்றி
அலைந்துகொண்டிருக்கின்றது
விரிவடைந்து கொண்டேயிருக்கும்
தனிமை தலைவிரித்து
இருவிழிகள் உருட்டி
கைகள்விரித்துஆடியபடி

கடந்துபோன அவலங்கள் மீண்டும்
நேராதபடி
அடிமேல் அடியெடுத்து
நெய்யத்தொடங்குகிறேன்
நமக்கான புதியதொரு
செம்மைவாழ்க்கையை
உனக்கும் தெரியாத பல
இனிமைநினைவுகளோடு

சராசரி பெண்களைப்போலவே உனக்கும்
தெரியவில்லை
எனக்குநேரவிருக்கும் கனவுகளைப்பற்றிய
கனவுகளின் சுவடுகள்
ஆசைக்கனவுகளை ஆயுளுக்கும்
நினைக்கும் ஓர்
ஆழ்ந்தநீடித்த கூடுதலில் புதைத்துவிட
முயலுகிறாய்

மிதமிஞ்சிய இரவொன்றில் மெல்லிய
இசையுடன்
அடரிருளின் துணைகொண்டு நாம்
இருவரும் தனிமையில்
பழங்களை ருசித்தபடி உன்னை
வீணையாக்கி
எட்டாத சுரங்களையும் மீட்டும்
அக்கனவை நீயும் கானலாம்

...**அ.முத்துவிஜயன்**

# இரவினாள்



ஓவியம் : அன்பழகன்

ஆழ் துயிலுக்கும் தெளிவிலா
விழிப்புக்குமிடையே
நெருக்கமாய் சுகமாய் தழுவிக் கிடக்கும்
இமைகள்,

அரைகுறையாய் வெளுத்த
வானம் நோக்கி இசையெனக் கீச்சிடும்
காலைக் குருவியின் ரீங்காரம்,

எதிர்வீட்டிலோ அடுத்த வீட்டிலோ
சன்னல் வழியே நாசி சாளரத்தில்
நுழையும் கம கம தேநீர் மணம்,

வரிகள் விளங்காத தொலைவில்
தொலைக்காட்சி வழி நேரடி இதயம்
சேரும்
இசைஞானியின் மெல்லிய சிருங்காரம்,

அடித்துப் பொழியுமோ அமைதியாய்
விலகுமோ என்ற

ஐயப்பாட்டிலே மேகநீர் காதலனை
தழுவிக் கொள்ளும்
நிலமகளின் நாண வாசம்,

இத்துணையும் ஏகாந்தமாய் சுவாசிக்கும்
இமை பிரியா கனவிலாத் துயிலுக்கான
ஏக்கத்தோடு

இன்றும் இரவுப் பணியில்
ஓர் ஆசை மனம்.

...யாழு மகிழ்

# உருப்பெருக்கமும் சிதைவின் மேடும்



ஓவியம் : அன்பழகன்

நத்தையின் உடற்கூட்டின்
உள் வெதுவெதுப்பில் படியும்
திவ்ய உறைவுக்கு மா வந்தனம்.

மயிலிறகின் வருடலில்
சூரியனைத் தவிர்க்கும்
சாதுர்ய மென்மைக்கு வரவேற்பு.
போன்சாய் மலர்களுக்கு
வெளிஉலகு
மிரள்வைத் தேக்கி வைத்த
இதழிதழான
பெருங் கண்கள்.
நக அழுக்களவே சேர்ந்த
கருணையை யாரிடமும்
பகிரத் தயங்கி
உமிழ்நீரில் கரைத்து
உள்ளுக்குச் செலுத்திக்கொள்வதில்
நிகரென ஏதுமில்லை.
இடப்புறக் கையின்
ஓங்கிய அறையில்
பலம் சற்று மட்டுப்பட்டு மலடாகி
கன்னநிலத்தில்
விளையாமலே
மட்கி உறங்க ஆரம்பிக்கிறது
கண்ணீரின் விதையொன்று.
நடுநிசியில் கூர்ந்தால்
சொற்ப எண்ணிக்கையில்
இருளைக் கிழித்தபடி
வெள்ளைப் புள் வரிசையொன்று
வலசையில்
நகர்வதைக் காண்கையில்
ஏனோ அடிவயிற்றில்
பெருஞ்சங்கடம் உருட்டியாட்டுகிறது.
எல்லாத் துயரங்களின் சாட்சியாய்
நிற்கும் மௌனம்
மீட்பின் கொடுவாளேந்தி
பூப்போல் கொய்யத் தலைப்படுகிறது
பூனையின் மெலிய நடையசைவோடு.

...வேதநாயக்

மௌனம் அமர்ந்திருந்த இடத்தில்
புற்கள் முளைத்திருக்க....
காற்று வருவதற்காகப்
போதி மரமொன்று நடப்பட்டது...
பறவைகள் கூடு கட்டியதால்
புல்லாங்குழலிசைக்க
மூங்கில்கள் வளர்ந்தன...
அமைதியைத் தேடிக் கொண்டிருந்தவர்கள்
வரத் தொடங்கினார்கள்...
கடைகளும் அதிகமாயின...
சிறப்புச் சொற்பொழிவுகளால்
ஆலயம் எழுப்பினார்கள்...
அமைதியை வாங்கக்
கூட்டம் அலை மோதியது...
ஆனாலும் அவர்களுக்குத்
தெரியாதவொன்று
அமைதி அங்கிருந்து வெளியேறியது.


ஓவியம் : அன்பழகன்

...முகமது பாட்சா



ஓவியம் : அன்பழகன்

காலத்தின் வாய்
காய்ச்சலால் கசந்தது

அது படுக்கையில் உன்னை நினைத்து
அசைபோட அசைபோட காலத்தின்
தொண்டைக்குழியையும்
காய்ச்சலின் அடி வயிற்றையும்
இனிப்பாக்குகிறது

நோயையும் வாயையும் ஒருசேர
இனிப்பாக்கும் உத்தி உனக்கே
வாய்த்திருக்குதடி!

...கார்த்திகேயன் மாகா

எனது காதலை
கல்வியபடி அழகாகப்
பறக்கிறது
அப்பறவை..
அது எங்காவது
போட்டு
விடக் கூடுமோவென்ற
கவலைகளிலேயே
கழிகிறது
எனக்கான காலம்.!

...சூர்யநிலா

**திருநீரில்** இரண்டு தப்பி
மீந்தது போன்ற
சாலை
ஒரு தற்காலிக நகரத்தைக்
கொண்டுவந்து பொட்டு
வைத்திருக்கிறது.
அன்றாடம் செலவுக்காக
வாய் பிளக்கும்
முட்டைப் பூச்சிகளால்
அவன் நிரம்பியிருக்கிறான்.
உறிஞ்சி மீந்த பாலை
சற்றேனும் காற்றின் அவரத்தை தணிக்கக்
கோருகிறது.
நிரம்பி நெளியும் சாக்குகள்
அவ்வப்போது அங்கு
வருவதும் போவதும்
பல்லுள்ள கொசுக்களை
நினைவுபடுத்துகிறது
இருவேறு உயிர்களின்
ரத்தங்கள்
தொடர்சூட்டால் வெளிறி வெளிறி
அவ்வப்போது
அம்மாவாசையற்ற போதும்
தோலுறிக்கின்றன
காலையில் சீரற்ற ஒழுங்கில்
தொங்கவைத்த
வெண் முறுக்குகளை
கொத்தும் குருவிகளுக்கு
யாரேனும் சொல்லிக் கொடுப்பார்களா?
இங்கு முறுக்கு மற்றும்
சூடான டீ கிடைக்கும்



ஓவியம் : அன்பழகன்

...சே.தண்டபாணி தென்றல்


ஓவியம் : அன்பழகன்

உன் நிழல் நான் கைவைத்த பின்தான்
விலகியிருக்கிறது
உன் சூடு இன்னும் இயைந்திருக்கும்
என் சாளரத்தில் தகிக்கத் தகிக்கத்
தவமிருக்கிறேன்
ஏதேனும் மறந்து விட்டதற்காய்
திரும்பலாம் அல்லது
என் உள்ளுணர்வுன்
மென்னியிறுக்கி இழுத்து வரலாம்
காத்திருக்கிறேன்
காற்றளைந்து கலைந்த மழைக்காய்.

...காயத்ரி

பாளம் பாளமாக வெடித்து
வறண்ட வயல்வெளியின் வரப்பொன்றில்
சிதறிக் கிடக்கின்றன.
காலி மது பாட்டில்கள்,
நசுங்கின டம்ளர்கள்,
கிழிந்த காரக்கடலை பாக்கெட்டுகள்,
புகைத்து முடித்த சிகரெட் துண்டுகள்,
ஒரு கைப் பை கொள்ளுமளவு
கொக்கொன்றின் வெண்ணிற இறகுகள்.

...ஜி.சிவக்குமார்

# அன்பு பற்றிய சிறுகுறிப்பு


ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

அம்மா இறந்த நாளன்றே
அப்பாவும் இறந்துவிட ஆசைப்பட்டார்
அப்படியான அவரின் ஆசைக்கு
அம்மா மீதான அன்பென்று
எதுவுமே இருந்ததில்லை.

அப்பா இராணுவ வீரன் போலவும்
அம்மா போர்க்கைதி போலவுமான
வீட்டில்
அவரின் செருமலைக்கேட்டதும்
தன் சிரிப்பைக்கூட ஒளித்துவைத்துவிடும்
அம்மாவுக்கென்று ஆசையெதுவும்
இருந்ததில்லை
ஒரேயொரு கனவைத்தவிர.

மஞ்சளும்... கொலுசுச் சத்தமுமான கனவு
அடிக்கடி வருவதாக அம்மாச்சியிடம்
ஏக்கமாகச் சொன்னபோது

‘அடி கழுத... நம்ம வீட்டுக்கு வரும்
போது
செஞ்சிக்க, அப்ப உன்னக்
கேள்விகேட்பாரு யாரு’ன்னு
அம்மாவைத் தோள்ல கெடத்திக்கும்.


அப்பாவின் செருமலே அம்மாவுக்கான
மொழி
புரியாதபோது நானும் அக்காவுமே
மொழிமாற்றிகள்.

அம்மாவுக்கு எல்லாவற்றிலும் நிதானம்
அப்பாவிற்கு யாவற்றிலும் வேகம்.

காலை காப்பித் தண்ணியிலிருந்து
இரவு பீடிக்கட்டு வரை
அம்மா இல்லாத இந்த இரண்டு மாதத்தில்
அவரின் செருமல் மொழிக்குப்
பிசிறேதும் இல்லையென்றாலும்,
இன்று அப்பா இறந்துவிட்டார்.

அம்மாவின் நிதானத்திற்கும்
அப்பாவின் வேகத்திற்கும்
இரண்டுமாதமென்பது தூரமில்லைதான்.

...ஆண்டன் பெனி



ஓவியம் : அன்பழகன்

கடந்து வந்த தொலைவின் பாதைகள்
எங்கிலும் சிந்திக்கிடக்கிறோம் நாம்

வார்த்தைகளாக. மௌனங்களாக
பார்வைகளாக புன்னகைகளாக
கோபங்களாக சண்டைகளாக
கண்ணீராக சமாதானங்களாக
வேறு வேறு வடிவத்தில்
சிந்திக்கிடக்கிறோம்

விரும்பி ஏற்கின்ற பிரிவின் பிறகு
தீராத அன்பை விழுங்கிச் செரிக்கும்
அவஸ்தையென்பது பெருவாதை

திசைகள் விடுபட்டுப்போனதொரு
பயணத்தின் வரைபடத்தில்
எதை நோக்கி நகர்ந்து செல்வது???

புள்ளிகளை இணைக்கவியலா
கோட்டோடு ஆனவுனது நகர்தலில்
என்னை
என்ன செய்வதாய் உத்தேசித்திருக்கிறாய்?

இரண்டாம் முறைக்கான உனது
காத்திருப்பில் விதிகளை மீறும்முன்
சிலநொடி என்னோடு தாமதித்துவிட்டுப்
போ

இப்போது என்னிடம் சற்று
நேரமிருக்கிறது
உன்னோடு சில முத்தங்களைப் பகிர
எனவே நீ சற்று தாமதித்தே போ...

...ஜானு இந்து

அப்போது
தவறிப்போன எங்கய்யாவை
பொணம்னு சொன்ன நொடி மாதிரி
இருக்கு......

கொஞ்ச நாளைக்கு முன்னாடி
ராசன் பொண்டாட்டி ருக்கோட
ஆட்டுக்குட்டி
தல சுத்தி பொறந்து சாக
ருக்கு மக அழுத கண்ணீர் ஞாபகம்
வருது....

எதிர்காத்துல
வழுக்கு மண்டைய யாருக்கும் தெரியாம
தடவிக்கிற
யுவனொருவனின் மூஞ்சி போலவும்
இருக்கு.....

போன முறை மாதிரியே
இந்த முறையும்
செட்டியாரம்மா மகள பொண்ணு பாக்க
வந்தவுக
பேசிட்டு சொல்றோம்னு சொன்ன மாதிரி
இருக்கு.......

முகூர்த்த நாளொன்றில்
அந்த விலைமகளொருத்தியின்
கொஞ்சூண்டு மல்லிகைப்பூவை
தொந்தி கனத்த ஒருவன்
படுத்தெழுந்து கசக்கிப் போன மாதிரியும்
இருக்கு....

அந்த உதிர்ந்த ஒற்றை இலை.....



ஓவியம் : அன்பழகன்

உதிர்ந்த ஒற்றைஇலையொன்றைப்பற்றி
யோசிக்கிறேன்......

...பொள்ளாச்சி முருகானந்தம்

பாதைகளைச் செப்பனிட்டுக்
கொண்டேயிருக்கிறார்கள்
இங்கே புதிய பாதைகள்
பிறக்கவேயில்லை

யானைகளின் நடைபாதை
மற்ற விலங்குகளின் பாதையாகி
மனிதர்களின் நடை பாதையாகி
போக்குவரத்துப் பாதையானது

அதே பாதைகளைத்தான்
செப்பனிடுகிறார்கள்
அகலப்படுத்துகிறார்கள்
பராமரிப்பு செய்கிறார்கள்
புதிய பாதைகள் பிறக்கவேயில்லை


ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

தாத்தாங்கள் மாட்டு வண்டி
வைத்திருந்தனர்
அப்பாக்கள் இருசக்கர வாகனங்களை
ஓட்டினர்
மகன்கள் மகிழுந்துகளில் போகிறார்கள்
அதே பாதைகளில்

பெருகிய வாகனங்கள்
நிகழ்த்திப்போகின்றன
தினமொரு விபத்தை
புதிய பாதைகள வேண்டி.
புரிந்துகொள்ளாதவர்கள்
பழைய பாதைகளைச்
செப்பனிட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்

புதியதென்று நம்பவைத்துக்கொண்டு

...சௌவி

--------



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

அம்மா ஆசையாய்
கேட்ட மூன்று சவரன்
சங்கிலி வாங்கியாயிற்று
செய்கூலி சேதாரத்தோடு
என்பத்தேழாயிரம்
ரூபாயானது!

அரை மூட்டை நெல் எடுத்து
இரு நாட்கள் ஊற வைத்து
பக்குவமாய் பாவி வைத்து
பயிராகும் வரை பாதுகாத்து
பயிர் செய்த பிறகாய்
கதிர் வரும் நேரத்தில்
கரிச்சான் குருவி கொஞ்சமும்
காட்டெலிகள் கொஞ்சமுமாய்
சேதாரமாக்கிவிட
கடைசியாய் மிஞ்சும்
நெல் மணிகளுக்கு
நாங்கள் செய்கூலியும்
வாங்கியதில்லை
சேதாரமும் வாங்கியதில்லை!

எங்கள் நெற்கதிரும்
ஏறக்குறைய
தங்கத்தின் நிறத்திற்கு
தகுந்த நிறமே!

...பெனடிக் அருள்

# நீதியின் கருகிய துகள்கள்



ஓவியம் : அன்பழகன்

அவரவர் தரப்பு நியாயங்களனைத்தும்
தராசுத்தட்டுகளில்
கவனமாய் எடுத்து வைக்கப்படுகிறது...
நியாயத்தின் கனத்தை கூட்ட
தட்டின் அடியில் பொருத்திவைத்த
புளியின் அளவு
கூடக்குறைய இருந்தது குறித்தே
பலரது கவனமும்
குவிந்து நிற்கிறது..
தராசுகளில்
பொய்களற்று
இயல்பாய் இடப்பட்ட
நியாயத்தின் சிறகுகள்
அநீதியின் காற்றுக்கு அசைந்து
இங்குமங்குமாய் புரண்டு
படுக்கிறது....!
நீதியை வளைப்பவனின் நியாயங்கள்
பொய்யின் கூடாரத்துக்குள்
விருப்பத்தின் தீர்ப்புகளை
எளிதாய் எழுதிவிடுகிறது....!
அநீதியின் பக்கம்
தாழ்த்தப்படும் தராசுத்தட்டுகளின் கீழ்
சர்வத்தையும் வென்றுவிட்டதின்
திமிர்
ஆணவத்துடன்
புளியின் வடிவத்தில்
ஒட்டிக்கொண்டிருக்கிறது...
மெல்லியதாய் ஆடிக்கொண்டிருக்கும்
நியாயத்தின் சிறகொன்று
அநீதியின் அனலில் தீய்ந்து
கருகிய துகள்களாய் உதிர்ந்து
நீதியின் கண்களில் விழுகிறது ....!

...சந்துரு

அது
அவ்வாறல்ல..


உண்மையில்
அது ஒரு விடுபடுதல்;
யாருடைய நம்பிக்கையின் கிரீடங்ளையும்
இனி நீ சுமந்தலைய தேவையில்லை..

அது ஒரு நிம்மதி;
யாருடைய எதிர்பார்ப்பின்
மேகங்களையும்
இனி நீ பொழிவிக்க தேவையில்லை..

இன்னும்
அது ஒரு ஆகப்பெரும் ஆசுவாசமும் கூட;
ஆம்
யாருடைய கற்பனையின் பிம்பத்திலும்
இனி நீ
வாழ்ந்திருக்கத் தேவையுமில்லை..

மேலும்
உருவாக்கப்படும்
எல்லா பிம்பங்களும்
அதை உருவாக்கியவர்
கைகளாலேயேஉடைக்கப்படும்
என்பதுதானே
காலத்தின்
நியதி

ஆதலால்
மகிழ்ந்திரு
உடைக்கப்படுவதிலும்
உடைந்து போவதிலும்
குறையொன்றுமில்லை!!!



ஓவியம் : அன்பழகன்

ஒரு பிரமிப்பின் சரிவில்..
"இவ்வளவு தானா நீ.." எனும் அலட்சிய பார்வையில்..

வெட்கித்துப்போகிறாய்..
அதை
பெருந்துன்பமெனவும்
பிதற்றிக்கொண்டிருக்கிறாய்..

...ரிஸ்கா முக்தார்



ஓவியம் : அன்பழகன்

**எனக்கென்ன** எனக்காகத்தான்
நானிருக்கிறேன்

உன்னால் அவிழ்த்துவிடப்பட்ட
நேசக்கிளை முறிந்திருக்கலாம்
அன்பின் சருகுகள் பிய்ந்து
விழுவதற்குள் உடைந்து
நொறுங்கியிருக்கலாம்...

எனக்கென்ன எனக்காகத்தான்
நானிருக்கிறேன்...

கருப்பு வெள்ளை பக்கங்களை
என்னிடம் காண்கின்ற
உன் விழிகளுக்குள்
நான் புதைந்து மீளாது நிற்பதை
வானம் செவந்து போனதில்
தனிமை யடர்த்தியாய் தொக்கி
நிற்கிறேன்...


எனக்கென்ன எனக்காகத்தான்
நானிருக்கிறேன்..

நேற்றோ இன்றோ நாட்களை
நாட்குறிப்புக்குள் எழுதிவிடுகிற
பழக்கமில்லை தான்
என் ஒவ்வொரு நாட்களிலும்
நீயிருப்பதுமாய் பின் தொலைவதுமாய்
செய்து விடுகிற உன் ரௌத்திரத்தில்
எனதன்பின் உதிரம்
சிந்திக்கொண்டிருந்தாலும்

எனக்கென்ன எனக்காகத்தான்
நானிருக்கிறேன்

...ராம் பெரியசாமி

சட்டென உடைந்து
நொறுங்கிய நொடிக்குப்பின்
பேச நினைக்கையில்
மௌனக் கதவு
மூடியே கிடக்கிறது..
ஆற்றாமை
அடிமனத்தில்
ஆரவாரம் செய்தாலும்
அகந்தையோ அழுத்தமோ
ஏதொன்றையும்
நினைத்துக் கொள்..
முதலடி எடுத்துவைக்க
மனதில்லை...
ஒவ்வொரு முறையும்
வலிய வந்து விளக்கம்
தர விருப்புமில்லை...
தீவிர சிகிச்சைப் பிரிவில்
கிடக்கும் நட்பைப்
பிழைக்க வைப்பதும்
சாகடிப்பதும்
இம்முறை உன் கையில்...



ஓவியம் : அன்பழகன்

...மதுரா

19.

# அழல்



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

உன் கண்களில்
ஒரு கடல் பார்த்தேன்
கடல்தானா தெரியாது
நான் உனக்குள்
முத்துக் குளிக்கிறேன்
நீ எனக்குள்
மீன் பிடிக்கிறாய்
நீலம்
நம்மைச் சுற்றிலும்
நிலமறியாத நீலம்.

...பழநிபாரதி.

நேசித்தில் பொருட்டு சிறகுகளை
விரிக்கிறது அவைகளின் நினைவின்
ரேகைகள்...

நிதானமாக வளர்ந்திருக்கும் அச்சிறிய
சிறகுகள் ஏனோ ஈரங்களை
சொட்டிக்கொண்டிருக்கின்றன..
சலனம் ஏதுமற்ற இருளில்...

சூத்திரம் அறியப்பட்ட இரவுகளில்
பட்சிகளின் சப்தங்கள் அவையிடையே
மிகுந்த பரிமாற்றங்களை
சொல்லிக்கொடுத்து விடுகின்றன....

விழிகளின் வெளிச்சத்தூரல்களோ..
மின்மினிபூச்சியாய் யாக்கையெங்கும்
மொய்கின்றது...

களைத்து விட்ட ஒப்பனைகளில்
கிளர்தெளுந்த தனலில் வெந்துவிடுகிறது
வெக்கை..
முகில்சொரிந்தவைகளாய் இதமாய் தூரி
வலுத்து விடுகிறது தெப்பமாய்...

நான்கு நாகங்களாய் கால்கள்
படமெடுத்து ஆடியதில் ஆசுவாசமாய்
அடக்கபோகிறது சாத்தானின் ஆசை..

அதனின் ஆதுரம் மெதுவாக முன்னும்
பின்னுமாய் ஊசலாய் பயணிக்கின்றன..


தள்ளிவிட ஏதுவாய் நரம்புகளை மீட்டிக்
கொண்டு இருக்கின்றன வீணைகள்...

அழுத்தி மீட்டியதில் பட்டென தெறித்து
விழுந்தது அறுபட்ட வீணைமொழி
சாத்தானின் போதனையில்..

பேரன்பில் சாத்தானின்
மோகங்கள் பக்கங்கள் கிழிக்காத
இசை எழுத்துக்களாய் பரவி
வெளுத்தப்புனலாய் எரிந்து
குளிர்விக்கிறது...

...சத்யா தமிழச்சி மருதாணி

# தேநுங்கள்.. கிடைக்கும்



ஓவியம் : அன்பழகன்

தெருவில் சிறுவர்கள் அடித்த கால்பந்து
உங்கள்
காலின் கீழ் வர ஒதுங்காமல் ஷாட்
அடிக்கிறீர்கள்..

வீட்டுக் குழந்தைகளின் தலையணைச்
சண்டையில்
கீழுதட்டை கடித்தபடி கலந்து
கொள்கிறீர்கள்..

உங்கள் அறையில் உஷ்..என்று ஒளியும்
அண்ணனைத்
தேடிவரும் தங்கைக்கு கண்களால்
காட்டிக் கொடுக்கிறீர்கள்..

தெருவோரம் விற்கும் புளியங்காயோ
நெல்லிக்காயோ
யாரும் காணாமல் வாங்கி சாப்பிட
நினைக்கிறீர்கள்..

தனித்திருக்கும் தருணம் தொலைகாட்சி
பார்க்கையில்
தட்டுப்படும் கார்டூன் சேனலை நிறுத்தி
ரசிக்கிறீர்கள்..

தெருவோரம் தூசு படிந்து நிற்கும்
வாகனத்தில்
பெயரெழுத கைகள் துறுதுறுக்க கடந்து
செல்கிறீர்கள்....

உறவினர் வீட்டில் வைக்கப்படும்
பலகாரத் தட்டில்
முந்திரியை முதலில் எடுக்கும் ஆசையை
அடக்குகிறீர்கள்..

உங்கள் குழந்தைகளின் பள்ளியில்
ஒலிக்கும்
நீள் மணியோசையை சிலிர்ப்போடு
ரசிக்கிறீர்கள்..

அட. ஆமாம் என உங்களுக்குள்
உள்ள குழந்தைத்தனம் ஆமோதித்திப்பது
கேட்கிறதா ?

தாமதமாகவில்லை..
அந்த குழந்தையை வெளியே கொண்டு
வாருங்கள்..
தொலைந்து போன உங்களை கண்டு
கொள்ளலாம்..

...ஜி ராஜன்

# வேட்கை



ஓவியம் : அன்பழகன்

நிலம் தொட்ட தங்கமீனுக்கு
கண்களின் நிறம் நீலம்

****

சமைக்க அறுத்த பறவையின்
இரைப்பையில் கொஞ்சமாய் விதைகள்

****


ஆழ்ந்த பள்ளத்தில் கிடத்தியவனின்
விரிந்த கைகளில் இன்னமும் மண்.

...கனிமொழி.ஜி

கணவனின்
உயிலின்படி
பிள்ளைகளுக்கு
பிரித்துக் கொடுத்தபின்
மனைவிக்கான
பாகத்தில் தான்
இருந்தது - அந்த
மஞ்சள் காடும்
மல்லிகைத் தோட்டமும்.

...சுரேஷ்பாபு_ராசேந்திரன்

# கடைசியின் கடைசி



ஓவியம் : அன்பழகன்

சில்வண்டின் ஓசைகள் மெல்ல
வலுவிழக்கிறது
பறவையின் சப்தங்கள்
சட்டென எழும்பிவிடக்கூடும்
எரியும் பிணத்தைக் கைபார்த்தவன்
கண்ணயற்சியும் கலையக்கூடும்
இரவு முழுவதும் ஒரு மிருகத்தின்
வேட்கையோடு வேட்டையாடிய
மாதவளும் உறங்குகிறாள்
உறங்காது தொக்கி நிற்கிறது இருண்மை
வாழ்வின் இருண்மையை
எந்தப் பறவைக்கூட்டில்
ஒளித்து வைப்பேன்
இந்த இருளோ கூடுகளைவிட்டு
நகரத்துவங்கிவிட்டது
ஆனாலும் தூண்டுத் திரியாய் எரிகிறது
மனதின் இருள்
மனதின் விருப்பக்குறியீடு பிறிதொருநாள்
பிறழலாம்
இங்கு எல்லாமும் மாயச்சுழற்சியே
நீரின் பிம்பமாய் மனம்
அசைந்தபடியிருக்கிறது
கடைசியின் கடைசியாய் எது
என்னுடையதிங்கு
முப்பாட்டனாய் ஓர்நாள் என் தோலும்
சுருங்கலாம்
கசங்காத உடல்பூண்டு யாருமில்லையிங்கு
எதுவரை ஓடினால்
இவ்வுலகச்சம் விலகும்
கிழிபடாத உலகின் பக்கத்தில்
முகம் பூக்க
எதை விட்டுச்செல்ல இவ்வுலகிற்கு.

...குமரேசன் கிருஷ்ணன்

# நெருப்பு நதிலொரு நீச்சல்!!



ஓவியம் : அன்பழகன்

## இருவிழிகள்

பார்வை வீசிக்
கொல்லும் போது
கொலைக்கருவிகள் பற்றிய புரிதல் வரும்
உங்களுக்கு.
விசம்
திடப்பொருளாய் மட்டுமே
இல்லையென்று
சில வார்த்தைகள்
உணர்த்தி விடும்
உங்களுக்கு.
மரணத்தோடு அணைப்பில் இருப்பீர்கள்.
காயங்களில் வழியும் குருதியை
சிலிர்போடு இரசிப்பீர்கள்.
பிடாரிப் பேயொன்று
உங்கள் தலைமுடியைப்
பற்றியிழுத்து ஆட்டாதாவென
ஏங்குவீர்கள்.
நீங்கள் எப்போதும்
வெள்ளைப் புறாவோடு
காத்திருக்க வேண்டும்.
கலவரத்தோடுதான்
பிரவேசிக்கும் தென்றல்.
ஒரு முத்தம் தேவைப்பட்டால்
குறைந்தபட்சம்
நீங்கள் மூன்றுமுறை
இறக்க வேண்டும்.
பற்றியெரியும் நந்தவனத்தில்
பூக்கள் மலரும்வரைக்
காத்திருக்க முடியாதெனில்
நீங்கள் தாடி வளர்க்க நேரும்.
இது
செத்து விளையாடும்
சித்துவிளையாட்டு என்று
நான் சொல்வதை
நம்ப மறுத்தீர்களேயானால்
நீங்கள் இன்னும்
உயிருக்கு உயிராகக்
காதலிக்கவில்லை
என்று அர்த்தம்.
கவலையை விடுங்கள்
இந்தக் கொலைக்கு பின்னும்
உங்களால் எல்லாம் செய்யமுடியும்.
தனிமையில்
வாழ்வதைத் தவிர.

...குறிஞ்சி நாடன்



ஓவியம் : அன்பழகன்

தார் சாலை
தகிக்கும் வெயில் வேளை

அந்த வீதியின் ஓரத்தில் அமர்ந்தபடியே
அருள்பாலிக்கிறார்கள்
ஆண்டவர்கள்..

பரபரப்பிற்கு கொஞ்சமும் பஞ்சமின்றி
படுவேகத்தில் பறக்கும் எரிபொருள்
குடிப்பான்கள்
கிளப்பிய புழுதிக்காற்றில்
சற்றுப் பளபளப்புக் குறைந்தே
இருக்கின்றன
மார்பில் ஆண்டவர்களின் முகங்கள்..

வண்ணக்கலவைகளில் வடிவாய்ச் சிரித்தும்
என்ன பிரயோசனம்..
ஐம்பது கொடுத்துக்கூட
அங்கு வாங்கத்தான் ஆளில்லை
அந்த ஆண்டவர்களை..

அடுக்கு மாடியிலே
அந்தரத்தில் தொங்கும் மின்விளக்குகளின்
ஜாலத்திலே
தானியங்கிப் படிக்கடைகளிலே
சுந்தரமுகத்தோடு வீற்றிருக்கும்
ஆண்டவர்கள்
சில ஐந்நூறுகளுக்கு
விற்பனையாகிவிடுகிறார்கள்..

ஆண்டவர்களைத்தான் விற்கின்றோம்
அதிலும் எத்தனை வித்தியாசமென
அலுத்துக் கொண்டே
துடைத்துக் கொண்டிருக்கிறான்
ஆண்டவர்களின் முகங்களை..
அரைவயிற்று ஆகாரத்திற்கும் வழியில்லாத
அந்தத் தெருவோரக் கடைக்காரன்..

...கீர்த்தி கிருஷ்


ஓவியம் : அன்பழகன்

அவன் விழுந்து கிடக்கிறான்
இயல்பாய் உதிர்ந்த
அவனின்
ஒற்றைப் பல் பற்றியும்
உப்பலாய் தெரிந்த
அவனின்
வலது கன்னம் பற்றியும்
சிவப்பாக பயமுறுத்திய
அவனின்
கண்கள் பற்றியும்
உருக்குலைந்து பலவீனமான
அவனின்
உடல் பலம் பற்றியும்
அறுந்து தொங்கிய
அவனின்
காலணி பற்றியும்
தையலிட்டு மறைக்கப்பட்ட
அவனின்
சட்டையின் கிழிசல் பற்றியும்
தோள் மீது கைபோட்டு நடந்த
அவனின்
நடப்பு நட்பு பற்றியும்
மெய் சொல்வதாக
பொய் வார்த்தைகளால்
உமிழ்ந்தவர்கள் கூட்டத்தில்
அவன் எழும்பி நின்ற
நிமிடம் வரை
பல வண்ண நாவால்
அவன் மயிரை வருடியவர்களும்
அடக்கம்..
கல் தடுக்கியோ
தடம் புரண்டோ
பலம்பிரயோகிக்கப்பட்டோ
தவறிவிழும் முதுகில்
கால்பதிக்க காத்திருக்கிறது
சக மனிதனின் இன்னொரு முகம்...
தவறி விழும்போது கூட
சரியாகவே
விழவேண்டியதிருக்கிறது...

...ஐ.தர்மசிங்

# பிச்சி



ஓவியம் : அன்பழகன்

ஊர் மறந்து உறவை மறந்து
பிதற்றித் திரிபவளை
பிச்சி என அழைத்தனர்.

எங்கிருந்து வந்தாள்
எவருக்கும் தெரியாது

மனச்சுமைகளையெல்லாம்
தலைசுமையாக்கியவள் போல
தான் சுமக்கும்
கந்தல் துணிமூட்டையின் பாரம் தாளாமல்
தள்ளாடி நடப்பாள்.


நகரின் மையத்திலிருக்கும்
ரவுண்டானாவை
தன் இருப்பிடமாக்கி கொண்டிருந்தவளின்
திமிரும் இளமையை துழாவும்
திருட்டுவிழிகளை பகடி செய்வது போல
ஆடையை அவிழ்த்து வீச
கூசித்திரும்புபவர்களை
துரத்தும் அவள் கெக்கெலிப்பு

தூமை கறைபடிந்த அழுக்கேறிய
ஆடையுடன் திரிகையில்
பழக்கடைக்கிழவி
பொண்ணு பொறப்பு போறாதுன்னு
பிச்சி பொறப்பு..முனகுபவள்
தூற்றுவாள் படைத்தவனை

தன் பெயரை நிலைநிறுத்த
நிதி வழங்கி நிர்வகிக்கும்
நிறுவனத்தின் பெயர் மறைந்து
பிச்சி ரவுண்டானா என புழங்கியது

ரவுண்டானா மேம்பாலமானபோது
மேடிட்டிருந்தது அவள் வயிறு
பாலம் புழக்கத்திற்கு வந்து
ரவுண்டானா மறைந்தபோது
அவளும்
அனைவராலும் மறக்கப்பட்டிருந்தாள்.

...சக்திஅருளானந்தம்


ஓவியம் : அன்பழகன்

மறுவாரமே வந்து
நீ கூட்டிப்போவதாய்
சொல்லி விட்டு
விட்டுப்போன
மறுவாழ்வு இல்லத்தின்
இந்த ஜன்னல்
கம்பிகளிடம்தான்
நீ மார் மீது உதைத்து
விளையாடியதிலிருந்து
நீ மார்மீது உதைத்து
உறவறுத்து போனதை
திரும்ப திரும்ப
புலம்பி தீர்த்தபடி
காத்திருக்கிறேன்.....

...கோ.ஸ்ரீதரன்

தூவானம் நின்றதும் விழுகிறது/
இலையின் விளிம்பில் தொங்கிய/
கடைசி நிலவு/

--

ஆற்றைக் கடந்ததும்
உலர்ந்து விடுகிறது
என் நிழல்.

--

மலரை நனைக்கிறது
மொட்டை நனைத்த
மழையின் தூவானம்.

--

வானவில்லுக்கு
இட ஒதுக்கீடு செய்து விட்டு
பொழிகிறது மழை.

--

சுற்றும் பம்பரம்
இலைகளைத் துளைக்கிறது
புழு.

--

கடைசியில் வந்தடைகிறது
பல முறை வழித்தவறிய
முதல் மழை.

--

உடனழைத்துச் சென்ற இடிமுழக்கம்
தனியே அனுப்பி வைத்துள்ளது
மழையை இன்று.

--

ஆலைச் சங்கின் சத்தம்
ஊடுருவுவதற்குள் உடைந்து விடுகிறது
நீர்க்குமிழ்.

--

மின்னல் வெட்டில் கண் கூசியவாறே
இருளை இழுத்துச் செல்கிறது
மின்மினி.

--

பேருந்து புறப்படும் வரை
காத்திருந்து தழுவுகிறது
கண்களை உறக்கம்.

...முனைவர் வே. புகழேந்தி


ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

புள்ளியாய் தொடங்கும்
பிள்ளையை பேரன்பில்
வடிகட்டியே வளர்க்கிறாள்
வயிற்றுக்குள்

நகரும் நாட்களில் எல்லாம்
யோசித்து யோசித்து
நேசத்தை நெசவு நெய்கிறாள்

கைகளில் தவழும் போது
தன்னை மறக்கிறாள்

கைபிடித்து நடக்கும்போது
உலகை மறக்கிறாள்

குட்டி நிலவோ
குறும்பு சூரியனோ
நெற்றிப்பொட்டில் முத்தமிட்டு
நெஞ்சுக்கூட்டில் பாசம் பிழிகிறாள்

கண்முன்னே வளர்ந்தபின்னும்
கடல்கடந்து போனபின்னும்
மாறாத அன்பை மனதில் சுமக்கிறாள்
எந்த மொழியில் உச்சரித்தாலும்
#அம்மா இனிக்கிறாள்

...தனபால் பவானி

# அன்சா என்ற அம்மா



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

**கொஞ்சம்** அழுதுவிட்டு எழுதவேண்டும்
என்று ஆசையாக இருக்கிறது
அனுமதிப்பீர்களா?

என் எழுத்துக்களில் உப்புகரிக்கும்
உதாசீனம் செய்யாதீர்
எனென்றால்
நன்றி என்ற வார்த்தை
நீர்மமாகத் தானே இருக்கும்?

தொப்புள் கொடி அறுத்து
கத்த கத்த எனை விட்டு பிரித்த
வலியைத்தான்
கண்ணை மூடி எனைபிரிந்து
அழவைத்து பார்கிறாள் அம்மா.

துமிட்டிக்காய் தடவியும்
காம்பு சப்பும் என்னை
அடித்த அடியில் அன்பு சுரக்கும்.

யாரோ கொடுத்த
ஒற்றை லட்டை ஒளித்து வைத்து
கொடுப்பாள்....
இப்போது நினைத்தால் கூட
இனிப்பாக இருக்கிறது.

தலைப் பிள்ளை என்பதால்
அப்பாவிற்கு இணையாக
மீன் துண்டு வைப்பதில் உண்டு
தம்பிக்கு ஒரு தகவல்.

தங்கையைத் தூக்கிவைத்த
இடுப்பில் களிம்பு தடவி
தவளை சொரி நீக்குவாள்.

களைக்கு போய் வரும் போது
நண்டு கொண்டுவந்து
வாழை நார் கட்டி மேயவிட்டு
வயலை விரித்து வைப்பாள்
கண்களில்.

அவள் இல்லாது நகரும் தினங்கள்....
நாட்காட்டியாய் கிழிக்கப்படுகிறது இதயம்.

இன்றைய தேதியில்
அம்மாவிற்கு வாழ்த்து சொல்லும்
என் மகனின் வார்த்தையில் இருக்கிறேன்
நான்.

அனைவருக்கும்
அன்னையர் தின வாழ்த்துகள்.

...பி.கே.சாமி

# நீயற்ற நாள்



ஓவியம் : அன்பழகன்

முக்கடைப்புக்கு இந்நேரம்
வேது பிடித்திருக்க வேண்டும்
தலைவலிக்கு மாத்திரை ஏதேனும்
எடுத்து வைத்திருக்க வேண்டும்
தூசடைந்த அறைகள்
ஒவ்வாமை ஏற்படுத்தி இருக்கலாம்

சாப்பிடலயா என்ற குரல்
திடீரெனக் கேட்பதுபோல் இருக்கிறது
நேற்று இரவு சாப்பிடாமல் படுத்ததால்
வயிற்றில் கொஞ்சம் எரிச்சல்
நெஞ்சுவரை ஏறிய காற்று
பயமுறுத்திக் கொண்டே வருகிறது

மௌனியாய் கிடக்கும் கைப்பேசியை
வெறித்துப் பார்த்துக் கொண்டே
இருக்கிறேன்
துண்டிக்கப்பட்ட அழைப்புகளுக்காக
தண்டிப்பதுபோல் இருக்கின்றன அவை
தகவல் அறைகள்
வாழ்த்துகளால் நிரம்பி வழிகின்றன
யாருக்கு அனுப்பலாம்
சிந்தித்துச் சிந்தித்து அனுப்புகிறேன்


இன்றும் மதியம்
எங்கு என்ன சாப்பிடலாமெனச்
சிந்தித்தவாறே நகர்த்துகிறேன்
பெருஞ்சோகமொன்றை

அவசர அவசரமாக கிளம்பி வருகையில்
காலுறை ஒன்று
நிறமாறி இருப்பதுபோல்
சலவை செய்யப்படாத சட்டையின்
கோடுகள்
மனதோரம் நெளிவதுபோல் இருக்கிறது

வெறுமைகளால் சூழப்பட்டிருக்கும்
வரவேற்புக் கூடத்தில்
மாட்டப்பட்டிருக்கும் ஒளிப்படத்தில்
அம்மாவும் நகர்த்திக் கொண்டிருக்கலாம்
எனக்கான கண்ணீர்த் துளிகளை!

...முனியாண்டி_ராஜ்

# ஒத்தை செருப்பு




ஓவியம் : அன்பழகன்

பிண ஊர்வலத்தில் கலந்துகொண்டு
இடுகாட்டுக்குள் நுழைந்த சமயம்
ஹரிச்சந்திரன் கோயில் முன்னே
கழட்டிவிடப்பட்ட என் பாட்டாவில்
ஒன்று மாயமாகியிருந்தது. அதற்குப்பதில்
பாரகன் ஒன்று அதன் பக்கத்தில்
கேட்பாரற்றுக் கிடந்தது.
பத்தாம் நெம்பர் பாட்டாவுடன்
எட்டாம் நெம்பர் பாரகன்
பேருக்குகூட ஒத்துப்போகவில்லை.
"மொகத்தைப் மூடப்போறேன்
அரிசி இட்றவங்கல்லாம் அரிசி இடலாம்,"
"கடைசியா ஒரு தடவை மொகம்
பாக்குறவங்கல்லாம் மொகத்தைப்
பாத்துக்குங்க சாமி...!" என்று பலதடவை
கத்திக்கொண்டிருந்த இடுகாட்டானின்
கால்களில் எனது பத்தாம் நெம்பர்
பாட்டாவும், அவனுடைய எட்டாம்
நெம்பர் பாரகனும் தனித்து தெரிந்தது.
அவனுக்கு பொருந்தாத,
எனக்கு சொந்தமான
அந்த ஒத்தை செருப்பு..

...மாறன்மணிமாறன்

# அம்மாவின் தினம்



ஓவியம் : அன்பழகன்

விடியலின் முகவரியைக்
காலன்
விழுங்கத்தொடங்கும்
கணங்களில்
பனிபடர்ந்த
என் விழிகளை
நானே உற்றுப்பார்க்கிறேன்

ஒரு தாலாட்டின்
மறைந்துபோன எச்சங்கள்
தட்டுப்படும்
சுகமான மடிகள்
அவை

இப்போதும் அழமாட்டேன்

இல்லாது போனபின்
புதிதாய் கண்ணீரை வரைவதில்
அப்பாவைப் போலவே
அவளுக்கும் விருப்பமில்லை

புயல் கடந்தபின்
மிஞ்சிய
பூக்களில் வேர்கள்
அவள் எழுதிய
பெயரோடுதான்
என்னை இன்றும்
அழைக்கின்றன

உலகின் முதல் நாள்
தோன்றிய முதற் துளியில்
தாகத்தையும்
ஒளிவைத்திருந்தது
அவள் சென்றபின் தான்
நான் கண்டுபிடித்தேன்

கருவறையில் பதிந்த
விழுதுகளின் விதைகள்
விளையாடிய கூட்டாஞ்சோற்றில்
உருவான கடல் நான்

அதில் நீந்தும்
மீன்களின் முட்களைப்
பிரித்தெடுப்பதிலேயே
முடிந்துவிடுகிறது
அம்மா பிறப்பித்த என் தினம்

...ம.கனகராஜன்

ஒளி போலத்
தோற்றும்
உள்வெளியிறங்கப் பின்
ஒவ்வொன்றாய்
இலதாகும்!

வழியாகியழைத்துப்
பாதியும் கடந்திடாப்
பயணவெளியில்
மாயமென்றாகி
மறைந்தகலும்!

மெய்யன்பொழுகக்
கைபற்றி மகிழும்
பொய்யென்றே
நானுணரப்
புறந்திரும்பிச்
சிரிக்கும்!

எத்தனைதான் பட்டறிந்தும்
எப்போதுமாய்த் தொடரும்
பேதம் கொள்ளாது
பின்னுமந்தப்
பேதைமனம்!

...வளவன் கரிகாலன்



ஓவியம் : அன்பழகன்



ஓவியம் : அன்பழகன்

**காணாமல்** போனவர்கள் பற்றிய
அறிவிப்பு வரும்தெல்லாம்
ஈரக் கண்களோடு
கடந்துபோவாள் ஆச்சி

கைப்பிடிச் சுவர்களில்
கரையும் காகங்களில்
ஒற்றைக்கால் காகத்துக்கெண்டே
கைப்பிடிச்சோறு சேர்த்து வைப்பனள்

ஷெல்லடியில் கால்இழந்து
பின்னொரு விடியாத இருளில்
தொலைந்து போன
தன் தம்பியெண்டும்,
இல்லையில்லை...
அவன் திரும்பி வருவானெண்டும்
தன் போக்கில் கதைத்துக்
கொண்டிருப்பனள்

ஆச்சி கண்மூடிய நாளினிண்டு
அந்த ஒற்றைக்கால் காக்கையும்
வருவதேயில்லை...

...ஷாலுமதி சுரேஷ்

# இறுதி நிலம்



ஓவியம் : அன்பழகன்

எனது எல்லாவிதமான அவாவுதலும்
முதல் நிலத்தின் மையப் புள்ளிக்குள்
மாத்திரமே
மயக்கமுற்றுக் கிடக்கிறது.
எனக்கான நிலமொன்று
வானக் கிளையில் அமர்ந்து
பறவை போல காத்திருப்பதை
மறக்கவே எத்தனிக்கிறேன்.

எனக்கான பிரதியும்
அதன் நிசப்த வாசிப்பும்
அந்நிலத்தில் விளையும்
ஆப்பிள் கனிகளும்
நான் விரும்பிய உயர்ந்த மதுக்குவளையும்
அங்குதான் இருக்கின்றன.

எனது முதல் நிலம்
வெற்றுத்தாளில் பறக்கும்
வண்ணத்துப் பூச்சியை ஒத்ததும்
வண்ணமற்றதுமான நிறப் பிரியை
என்பதை எனக்குள்ளிருக்கும்
நான் அறிவதற்கு
மறுப்புத் தெரிவித்துக்
கொண்டிருக்கிறேன்.

வீடு திரும்புதல் மிக அவசியமானது
ஆரம்பித்த இடத்தில் முடிப்பதே
பறவைகளின் கூடு திரும்புதலின்
இன்னுமொரு யுக்தி
வனத்தில் வாழும் குரங்குகளும்
அப்படிதான்
எனினும் நான்
வீடு திரும்ப விரும்பாதவனாய் இருக்கவே
விரும்புகிறேன்.

எனது இறுதி நிலம் காத்துக் கிடக்கிறது
தொன்மங்களை அள்ளிக் கொண்டு
நான் முதல் நிலத்திலேயே
தாவிக் கொண்டிருக்கிறேன்
நிணம் தின்னும் பிசாசுகளுடன்
வாழ்வது எனக்குப் பிடித்துப்
போய்விட்டது.

மன்னிக்க,
நான் என்பது எழுத்துப் பிழை.

...ஏ. நஸ்புள்ளாஹ்

**முகம்** முழ்கும் இருளின்
கசியும் இசையென
என் நாசியை நிறைக்கிறது
இந்த பிச்சிப்பூ வாசம்

பிச்சிப்பூக்கள் மடலவிழ
மொட்டுக்களாய் கூம்பிவிடுகின்றன
அந்தரங்க முகங்கள்

நினைவுகளை கிளற
ஒரு சொல்லோ ஒலியோ
வாசனையோ போதுமானதாகிவிடுகிறது

ஒரு புன்னகையோ
உதட்டுச்சுழிப்போ
ஒரு கண்ணீர்துளியோ
ஒற்றை வார்த்தையோ
இருளின் வாசலில் தலைகாட்டிப்போகும்
தயக்கமின்றி

என் உலகத்திற்குள் எல்லோரும்
நுழைந்து விடுகிறார்கள்
என்னைத்தவிர
வாசலில் காத்துக்கிடக்கிறேன்
அனுமதிவேண்டி


இந்த முகம் மறைக்கும் இருளில்

...தங்கேஸ்



ஓவியம் : அன்பழகன்

# காதலின் கதவு


ஓவியம் : அன்பழகன்

உன் ஒரே ஒரு
அழைப்புக்காக மட்டுமே
காத்திருக்கிறேன் நான்

காற்றில் மூடிய
திறக்காத உன் வீட்டுக் கதவு
முடிவற்ற புனைவுகளை
வரைகிறது காற்றில்

இந்தப் பக்கம் நான் அழுவதாகவும்
அந்தப் பக்கம் நீ சிரிப்பதாகவும்
இந்தப்பக்கம் நான் போய் விட்டதாகவும்
அந்தப்பக்கம் நீ தூங்கிவிட்டதாகவும்
இந்தப்பக்கம் நான் உன்னைக்
குறை சொல்வதாகவும்
அந்தப்பக்கம் நீ என்னை
நிராகரிக்கத் தொடங்குவதாகவும்
முடிவற்ற பிரதிபம்பங்களை
உருவாக்கும் கண்ணாடியாக
மாறி நிற்கிறது
இந்தக் கதவு

கதவின் இருபுறமும்
உள்ள திறக்கும் பிடிகளில்
தொங்குகின்றன இதயங்கள்

நிராகரிப்பை அறிவிக்கும்
அழைப்பாக இருக்குமென்று தெரிந்தும்
உன் ஒரே ஒரு
அழைப்புக்காக மட்டுமே
காத்திருக்கிறேன் நான்.

...இரா.கவியரசு

# படைப்பு
# கதையரங்கம்

## படைப்பு குழுமத்தின்
## மூன்றாம் ஆண்டு விழா
## முப்பெரும் விழா அறிவிப்பு

**வி ரை வி ல் . . .**